# THE FINAL WORD AT EASTER
# கடைசி வார்த்தையான உயிர்த்தெழுதல்

இயேசு சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய சம்பவத்தை கண்ட பல முக்கிய நபர்கள் அங்கு நடந்த எதையும் ஒப்புக் கொள்ளவில்லை, ஆனால் இயேசுவின் கதை முடிந்தது என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர்:

பொந்தியு பிலாத்து தனது தேசத்தில் நடந்த அனைத்து விஷயங்களிலும் இது தான் கடைசி வார்த்தை என்று நம்பினான். இது ரோம பேரரசின் ஒரு பிரச்சனைக்குரிய காரியமாகவே இருந்து வந்தது, இதில் சவாலான சூழ்நிலைகளே இருந்தபோதிலும், பிலாத்து கேள்விக்கு இடமில்லாத அதிகாரத்துடனே அங்கு செயல்பட்டார். ஜனங்களிடையே ஏற்பட்ட கலகத்தினிமித்தம் அமைதியை ஏற்படுத்த ஒரு நிரபராதி செத்தாலும் பரவாயில்லை என்ற அவனுடைய முடிவினிமித்தம், அப்படியே ஆகட்டும் என்று அவரை (இயேசு) சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான், மேலும் இயேசுவை சிலுவையில் அறைந்து கொலை செய்யும் நாடகம் அவனது உத்தரவின் பேரில்தான் நடத்தப்பட்டது. அதன் பின்பு, இயேசுவின் மரணத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட பிலாத்து, யூதமதத் தலைவர்களைப் பார்த்து: உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே நீங்கள் போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள் என்று (மத்தேயு 27:65) தனது இறுதி அறிவுரைகளை கூறினான். அடிப்படையாகவே இயேசுவின் கல்லறையில் மூன்று பூட்டுகள் இருந்தது என்பது கருத்து: கல்லறையின் முன்பு ஒரு பெரிய கல் உருட்டி வைக்கப்பட்டு, அதில் ஒரு அதிகாரப்பூர்வமான மற்றும் சக்தி வாய்ந்த ரோம அரசின் முத்திரை ஒன்று எச்சரிக்கையாக பொறிக்கப்பட்டதுடன், அங்கு யாருடைய தலையீடும் இல்லாமல் இருக்க ஆயுதம் ஏந்திய காவலர்களும் நிறுத்தப்பட்டிருந்தனர். இதனால் இயேசுவின் கதை இத்துடன் முடிந்துவிட்டது என்பதில் பிலாத்து உறுதியாக இருந்தான்.

இயேசுவின் தாயான மரியாள், தனது அன்புக்குரிய மகன் துன்பப்படுவதைப் பார்த்து அதன் வேதனையைப் புரிந்துகொண்டதுடன், அங்கு இயேசுவுக்கு எதிர்ப்பு பெருகுவதையும் பார்த்துக்கொண்டிருந்த அவள் ஏதோ பயங்கரமான சம்பவம் நடக்கப்போகிறது என்று நினைத்து கவலைப்பட்டிருக்கக்கூடும். இறுதியில், இயேசுவுக்கு எதிரான (உலகப்பிரகாரமான) சக்திவாய்ந்த எதிரிகள் அவருக்கு எதிராக நகர்ந்தனர். அவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவர் அனுபவித்த அடிகள், சித்திரவதைகள் மற்றும் அவமானங்கள் பற்றிய வதந்திகள் தேசமெங்கும் பரவிற்று. தன் மகன் இப்படிப்பட்ட வலியை அனுபவிக்கிறான் என்பதை அறிந்த அவள் (மரியாள்) நான் என் மகனுக்கு உதவியற்றவளாகி விட்டேனே என்று நினைத்து அவரைக் காப்பாற்ற தனது உயிரையேக் கொடுக்க முனைந்திருந்தாலும், அது அங்கு சாத்தியமாகவில்லை. அந்த வேளையில் இயேசுவின் வேதனையான தருணங்களை தனியாக எதிர்கொள்வதை அவள் விரும்பாமல், கசப்பான முடிவு வரை அவருடைய அருகாமையில் நெருங்கி நிற்பதை மட்டுமே மரியாளால் செய்ய முடிந்த சிறந்த செயலாக இங்கு காண முடிந்தது. இயேசு தம்முடைய கடைசி மூச்சை அதாவது பிதாவாகிய தேவன் தனக்கு கொடுத்த ஆவியை அவருடைய கையில் ஒப்புக்கொடுக்கும் வரைக்கும், மரியாள் சிலுவைக்கு அருகிலேயே இருந்தாள் (யோவான் 19:25). மிகுந்த விரக்தியால் நிரம்பியிருந்த மரியாள், அவருடைய வேதனையான மரணம் இயேசுவின் வாழ்வில் இதுவே இறுதி அத்தியாயம் என்பதில் உறுதியாக இருந்தாள்.

இத்துடன் அவரது ஊழியம் முடிந்துவிட்டது என பேதுரு எண்ணியிருக்கக்கூடும். உண்மையில், அதுதான் சரியானது என்பதை அறிந்திருந்த அவன் எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசுவை ஒருமுறை அல்ல, இரண்டு முறை அல்ல, மூன்று முறை மறுதலித்த நிலையில், அவர் தோல்வியடைந்து விட்டாரோ, இயேசுவின் வாழ்வு முடிந்துவிட்டதோ என்ற சூழ்நிலையை உணர்ந்த நேரத்தில், பேதுரு: சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துகொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான். (மத்தேயு 26:75). பேதுரு: இந்த மாதிரியான விரக்தியை ஒருபோதும் அடைந்ததில்லை. மற்றவர்கள் அவரை மறுத்தாலும், நான் ஒருபோதும் மறுதலிக்கமாட்டேன் என்று அவரது உடன் சீஷருக்கும் இயேசுவுக்கும் உறுதியளித்த போதிலும், அவரது மனநிலையை மாற்றியமைக்க ஒரு விடாமுயற்சியான வேலைக்காரப் பெண் மட்டுமே தேவைப்பட்டார். இயேசுவை மறுதலித்ததினால் பேதுரு கடந்த மூன்று வருடங்களில் ஆண்டவரோடு செலவு செய்த தனது வாழ்க்கையையும், மகிழ்ச்சியையும் தனக்கு கிடைக்கப்பெற்ற ஊழியத்தையும் இழந்துவிட்டதாக நினைத்தார். சிலுவையில் உண்டான இயேசுவின் மரணத்தோடு அவரது வாழ்வில் தனது பங்கு இப்போது முடிந்துவிட்டது என்று பேதுரு நம்பினான்.

ஆனால், இயேசுவின் கதை இத்துடன் முடிந்துவிடவில்லை. இயேசு எப்போதும் நினைவுகூறும் மிக முக்கியமான ஒரு விஷயத்தை அதாவது கடைசி வார்த்தை ஒன்று இருக்கிறது என்பதை அவர்கள் ஒவ்வொருவரும் மறந்துவிட்டார்கள்:

அந்த முதல் உயிர்த்தெழுதல் காலையில், இயேசுவின் முழு சம்பவமும் ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டது என்று அனைவரும் கருதியபோது, பரலோக தேவனாகிய தகப்பன் மிக வல்லமையுள்ள அத்தியாயத்தை எழுதிவைத்ததை அறிய முடிந்தது. கல்லறையின் முன் இருந்த பெரிய கல் உருட்டப்பட்டது, முத்திரை உடைக்கப்பட்டது மற்றும் காவலர்கள் பயத்தால் செத்தவர்கள் போலானார்கள் (மத்தேயு 28:2-4). பூமியில் உள்ள எந்த ஜனத்தாலும் அல்லது எந்த வல்லமையினாலும் ஆண்டவருடைய கடைசி வார்த்தை நிறைவேறப் போவதைத் தடுக்க முடியாது என்பதை இவை அனைத்தும் நிரூபித்தன. **இயேசு உயிர்த்தெழுந்தார், மீண்டும் உயிருடன் எழுந்தார்,** என்னும் அந்த வல்லமையுள்ள சத்தியத்தின் நிமித்தமாக, எல்லாம் மாறிவிட்டது. பிலாத்து மற்றும் அவர் கட்டளையிட்ட சூழ்நிலைகள் தேவனுடைய குமாரன் அல்லது அவரைப் பின்பற்றுபவர்கள் மீது கடைசி அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. மரியாள் தனது மகனின் மரணத்தை முடிவாகக் காணவில்லை, ஆனால் மனிதகுலத்திற்கான தேவனின் அதிசயமான கிருபையின் தொடர்ச்சியான சம்பவத்தின் ஒரு பகுதியாகவே பார்க்க முடிந்தது. அடுத்த நாட்களில், பேதுரு தனது மறுதலிப்புக்குப் பிறகு செய்த ஊழியம் அவருடைய நம்பிக்கை அல்லது அவர் கற்பனை செய்வதை விட அதிகமாக இருக்கும் என்று கண்டு கொண்டார். (யோவான் 21:15-19).

ஒருவேளை நீங்கள் இப்போது உங்கள் வாழ்க்கையில் சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். எந்த சூழ்நிலையிலும் இதைப் பற்றி உறுதியாக இருங்கள்: ஆண்டவருக்கு கடைசி வார்த்தை உண்டு, மேலும் எந்த எதிரியும் அல்லது சூழ்நிலையும் நம் சர்வவல்லமையுள்ள தேவனின் வார்த்தைக்கு எதிராக ஒருவராலும் ஒரு சக்தியாலும் நிற்க முடியாது.

ஒருவேளை நீங்கள் நேசிக்கும் ஒருவர் ஆழ்ந்த துன்பத்தில் இருக்கிறார் என்றால், அவர்களின் வலியைக் குறைக்கவோ அல்லது அவர்களின் காயத்தைக் குணப்படுத்தவோ உங்களால் முடியாத போது, நீங்கள் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், ஆண்டவருடைய கடைசி வார்த்தை இருக்கிறது, அந்த வார்த்தையில் உள்ள இரக்கம், நம்பிக்கை மற்றும் கடைசி வெற்றி யாவும் தேவ வல்லமையினால் நிறைவேற்றப்படும்.

ஒருவேளை, பேதுருவைப் போல, நீங்கள் இனி ஆண்டவரால் பயன்படுத்தப்படுவதற்கு தகுதியற்றவராக உணரலாம். ஒருவேளை நீங்கள் ஒரு காலத்தில் அவரை மறந்து போயிருக்கலாம், ஒருவேளை அவர் உங்களை கைவிட்டுவிட்டார் என்று நினைக்கலாம். அவருடைய உயிர்த்தெழுதலின் வார்த்தையில் உறுதியாக இருங்கள்: ஆண்டவருடைய கடைசி வார்த்தை இருக்கிறது, அது மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தலுக்கான வல்லமை நிறைந்த வார்த்தையாக இருக்கும். யாருக்குத் தெரியும்? ஒருவேளை, பேதுருவைப் போலவே, உங்களுக்கு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஊழியம் இன்னும் வரவில்லை என்பதை இதன் வழியாகக் கண்டு கொள்வீர்கள்.

உங்களுக்காகவும், முழு உலக இரட்சணிய சேனைக்காகவும் என்னுடைய ஜெபம் என்னவென்றால், இந்த உயிர்த்தெழுதலோடு இயேசுவின் கதை முடிந்துவிடவில்லை என்பதையும், ஆண்டவரிடத்தில் எப்போதுமே வெற்றிகரமான வல்லமையுள்ள வார்த்தை இருக்கிறது என்பதையும் மீண்டும் அறிவிக்க வேண்டும் என்பதாகும். தனக்கு எதிராக நிற்கும் எந்த எதிரியையும் விட நம் தேவன் பெரியவர் என்பதை நினைவூட்டும் வெற்றிகரமான வார்த்தையாக இது இருக்கும். உடைந்த இதயம் உள்ளவர்கள் மற்றும் புண்படுத்தப்பட்டவர்களுக்கு இது இரக்கத்தையும், நம்பிக்கையையும் உண்டாக்கும் வல்லமையுள்ள வார்த்தையாக இருக்கும். மேலும் இது ஒரு மறுசீரமைப்பு வார்த்தையாகவும் இருக்கும், அவருடைய மீட்கும் கிருபையை விட எந்த பாவமும் பெரியதல்ல என்பதை நமக்கு இது நினைவூட்டுகிறது.

ஆண்டவரிடத்தில் கடைசி வார்த்தை இருக்கிறது, அது வெற்றியின் வார்த்தையாக இருக்கிறது!

உயிர்த்தெழுதல் வாழ்த்துகள், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!.